**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No.90/2017</u>**
**<u>வழக்கு சாட்சி PW– 1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அரசமுத்து | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 03rd, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நானும், எதிரிகளும் வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கு சம்பவம் பற்றி சேகரும், ஆதிநாராயணனும் போன் மூலம் தகவல் சொன்னார்கள். காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது, நான் இந்த தகவலை கூறினேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் வல்லம், நடுத்தெரு என்றால் சரிதான். சாட்சி ராஜசேகரின் வீடு, காமராஜர் தெரு என்றால் சரிதான். சாட்சி ஆதிநாராயணனின் வீடு வல்லம் மெயின் ரோடு என்றால் சரிதான். சாட்சிகள் ராஜசேகரன் மற்றும் ஆதிநாராயணன் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல. அவர்கள் இருவரும் எனது சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும், சம்பவம் நடந்த இடத்திற்கும் 200 மீட்டர் தொலைவிருக்கும். நான் சம்பவயிடத்திற்கு இரவு 08.40 மணிக்கு

சென்றேன். அப்போது எனது மகன் சம்பவயிடத்தில் கையில் இரத்தத்துடன் நின்று கொண்டிருந்தான். நான் எனது மகனுடன் செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் கூறுவது போல், எனது மகனுடன் செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்தின் அருகே நிறைய கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது என்றால் வீடுகள் உள்ளது. புகார் மனுவை நான் தான் எழுதினேன். புகார் மனுவில் எனது மகனுக்கு வலது உள்ளங்கையில் காயம் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் நிறைய இரத்தம் படிந்திருந்தது என்றால் அதை நான் பார்க்கவில்லை. கையை தான் நான் பார்த்தேன். வல்லத்திற்கும், செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கும் குறுக்கு வழியே சென்றால் 3 கி.மீ தொலைவிருக்கும். செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் செங்கோட்டை காவல் நிலையம் தான் செல்ல வேண்டும் என்றால் நேர் வழியாக வழியாக செல்ல வேண்டும் என்றால் காவல் நிலையம் வழியாக செல்ல வேண்டும். குறுக்கு வழியாக செல்ல வேண்டும் என்றால் அதற்கான அவசியமில்லை. நாங்கள் குறுக்கு வழியாக மருத்துவமனைக்கு சென்றோம் என்ற விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் கூறவில்லை. நான் அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டு, காவல் நிலையத்திற்கு வந்து சம்பவத்தை பற்றி கூறவில்லை என்றால் சரிதான். நான் கையை சரி செய்யத் தான் முயற்சித்தேன். மருத்துவரிடம் எனது மகன் அவரை அரிவாளால் தாக்கியதாகத் தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் வாளால் தாக்கியதாகத் தான் கூறினான். நாகர்கோவில், திரவியம் மருத்துவமனை மருத்துவரிடம் சம்பவம் 11.10.2015ம் தேதி, 09.30 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது எனக்கு நியாபகமில்லை. சம்பவயிடத்தில் லைட்

இருந்ததாக புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. செங்கோட்டை அரசு மருத்துவமனையில் எனது மகன் சம்பவம் இரவு 08.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால், அவர் எத்தனை மணி என்று குறிப்பிட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. எனது மகனை யார், எந்த இடத்தில் வைத்து தாக்கினார்கள் என்று போலீசார் சொல்லித் தான் தெரியும் என்றால் சரியல்ல. நண்பர்கள் கூறினார்கள். நண்பர்கள் கூறியதாக புகார் மனுவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் மனு கொடுத்த தேதிக்கு பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் போலீசாரிடம் எழுதி கொடுத்த விபரத்தைத் தவிர வேறு எதுவும் பேசவில்லை. திரவியம் மருத்துவமனையிலிருந்து எனது மகன் விடுவிக்கப்படும் வரை நான் எனது மகனுடன் அங்கு இருந்தேன் என்றால், நான் அடுத்த நாளே எனது வீட்டிற்கு வந்து விட்டேன். நான் சொன்ன நாள், நேரத்தில் எனது மகனை எதிரிகள் தாக்கவில்லை என்றும், என் மகனை தாக்குவதற்கு எதிரிகளுக்கு எந்த உள்நோக்கமும் கிடையாது என்றால் சரியல்ல. இருட்டு நேரத்தில் எனது மகனை யாரோ, தாக்கியதை வைத்து கொண்டு, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No.90/2017</u>**

**<u>வழக்கு சாட்சி PW– 2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஸ்டீபன்சன் ராஜ் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 03rd, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

எதிரிகள் என்னை மிரட்டும் நான் தப்பித்து ஓட முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். பேசும் போதே சம்பவம் நடந்து விட்டது. சாட்சிகள் ஆதிநாரயணன் மற்றும் இராஜசேகரன் என்னை காப்பாற்ற முயற்சி செய்யவில்லை என்றால் அவர்கள் தனியாக பேசிக்கொண்டிருந்தார்கள். என்னை காவல் ஆய்வாளர் 20ம் தேதி வீட்டில் வைத்து விசாரித்தார். நான் நாகர்கோவில் தனியார் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு கையில் ஏற்பட்ட காயத்திற்கு மயக்க மருந்து கொடுத்து, நான் தூக்கத்தில் இருந்தேன் என்றால் சரிதான். என்னுடன் எனது தகப்பனார் செங்கோட்டை மருத்துவமனைக்கு வரவில்லை என்றால்

சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்ற பிறகு அங்கு வந்தார். சம்பவம் 08.45 மணிக்கு நடந்ததாக நான் போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு பக்கத்தில் நிறைய வீடுகள் மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த இடமானது ஆள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்றால் சரிதான். நான் செங்கோட்டை அரசு மருத்துவரிடம் 08.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சம்பவமானது 08.30 லிருந்து 08.45 மணிக்கு நடந்தது. எனக்கு நேரம் சரியாக தெரியாது. என்னை அரிவாளால் தாக்கியதாகத் தான் நான் மருத்துவமனையில் கூறினேன் என்றால், என்னை வாளை வைத்து தாக்கியதாகத் தான் நான் மருத்துவரிடம் கூறினேன். நான் மருத்துவரிடம் சம்பவம் எந்த இடத்தில் வைத்து நடந்தது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் நாகர்கோவில் திரவியம் மருத்துவமனையில், சம்பவம் 09.30 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டேன் என்றால் அது எனக்கு சரியாக நியாபகமில்லை. நான் சுயநினைவு இல்லாமல் அப்போது இருந்தேன். நான் நாகர்கோவில் தனியார் மருத்துவமனையில் சேர்ந்ததிலிருந்து டிஸ்ஜார்ஜ் ஆகும் வரை எனது தகப்பனார் என்னுடன் தான் இருந்தார் என்றால், அவர் வீட்டிற்கு வந்து விட்டார். நான் முழுவதும் சுயநினைவு இல்லாமல் இருந்ததினால், எனது தகப்பனார் நான் 15ம் தேதி டிஸ்ஜார்ஜ் ஆகும் வரை எனது தகப்பனார் என்னுடன் இருந்தாரா? இல்லையா? என்ற விபரம் தெரியாது என்றால், நான் முழுவதுமாக சுயநினைவு இல்லாமல் இல்லை. சாட்சிகள் ஆதிநாரயணன் மற்றும் இராஜசேகரன் எனது சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் எங்கள் சமுதாயத்திற்கும், எதிரிகள் சமுதாயத்திற்கும் சுமூகமான உறவுகள் இல்லை என்றால் சரிதான். நான் கடையிலிருந்து வாங்கி வந்த சாமான்கள் சம்பவயிடத்திலேயே கீழே விழுந்து விட்டது

என்றால் சரிதான். எனது இரத்தம் படிந்த துணிமணிகளை ஆய்வாளர் விசாரிக்கும் போது, நான் ஆஜர்படுத்தினேனா, என்று எனக்கு நியாபகமில்லை. நான் சொன்ன நாள், நேரத்தில் 2ம் எதிரி, 1ம் எதிரியை தூண்டி விட்டு, அவர் என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. இருட்டு நேரத்தில் எனக்கு வேண்டாத நபர்கள் என்னை தாக்கியதை வைத்து, எனது சமுதாயத்தாரின் தூண்டுதலின் பேரில், எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்து, நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அம்மா சொல்லித்தான் கடைக்கு சாமான்கள் வாங்கச் சென்றேன் என்றால் சரிதான். அந்த நேரம் எனது தகப்பனார் வீட்டில் இல்லை என்றும், அவர் கடையில் இருந்தார் என்றால் சரிதான். கடை பக்கத்தில் தான் உள்ளது. எனது தகப்பனார் கோழிக்கடை வைத்துள்ளார்.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No.90/2017</u>
<u>வழக்கு சாட்சி PW– 3</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆதிநாராயணன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 03rd, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் குடியிருப்பது வல்லம் மெயின்ரோடு என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வல்லம் நடுத்தெரு என்றால் சரிதான். எனது வீட்டிற்கும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்குமிடையே 500 அடி தொலைவிருக்கும் என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது உறவினர்கள் கிடையாது என்றும், அவர்கள் எனது சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நானும், இராஜசேகரனும் எதிரிகளை தடுக்க எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகே நிறைய வீடுகளும், கடைகளும் உள்ளது என்றால் சரிதான். ஸ்டீபன் ராஜா பேசிக்கொண்டிருக்கும்போதே தப்பித்து ஓடு என்று நானோ, இராஜசேகரனோ கூறவில்லை என்றால் சரிதான். ஸ்டீபன்

ராஜாவை நான் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். நான் ஸ்டீபன் ராஜாவை காவல் நிலையம் வழியாக அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. செங்கோட்டை மருத்துவமனையிலிருந்து, தென்காசி மருத்துவமனைக்கு ஸ்டீபன் ராஜா ஆம்புலன்ஸில் சென்றார். நான் ஸ்டீபன் ராஜாவை அழைத்து சென்றபோது, என் மீதும் இரத்தக்கறை படிந்தது. நான் இரத்தக்கறை படிந்த எனது ஆடையை தூர போட்டு விட்டேன். அவ்வாறு ஆடையை நான் தூர போட்ட விபரத்தை ஆய்வாளரிடம் நான் கூறவில்லை. இந்த சம்பவம் சம்பந்தமாக நான் காவல் நிலையத்திற்கு சென்று, நேரடியாக புகார் கொடுக்கவில்லை. அதுபோல், போன் மூலமும் தகவல் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நிறைய கூட்டம் கூடியது என்றால் சரிதான். ஸ்டீபன் ராஜாவிற்கு கையில் துணியை கட்டி தான் அழைத்து சென்றேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் மறுநாள் எனது வீட்டில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆய்வாளர் நான் கூறியதை எழுதி, பதிவு செய்து கொண்டார் என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எங்கள் சமுதாயத்திற்கும், எதிரிகள் சமுதாயத்திற்குமிடையே பகை இருந்த நிலையில் யாரோ, ஸ்டீபன் ராஜாவை தாக்கியதை எதிரிகள் தான் தாக்கியதாக எங்கள் சமுதாயத்தின் ஆலோசனையின் பேரில் எதிரிகள் தான் தாக்கியதாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.